www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2025 கடலூர் மாவட்டம்
## பன்னிரெண்டாம் வகுப்பு வேதியியல் விடைக்குறிப்புகள்
## பகுதி - அ

I.சரியான விடைகள்

| வினா எண் | விடைகள் | | வினா எண் | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | அ) | கார்பன் ஒடுக்கம் | 9 | ஈ) | கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு |
| 2 | ஈ) | $(SiO_4)^{4-}$ | 10 | ஈ) | $(Al_2(SO_4)_3$ |
| 3 | ஆ) | $F_2$ | 11 | அ) | ஃபீனால் |
| 4 | அ) | 5.92BM | 12 | ஆ) | விக்டர் மேயர் சோதனை |
| 5 | ஆ) | 0 | 13 | அ) | Sn/HCl |
| 6 | ஆ) | FeO | 14 | ஈ) | D-குளுக்கோஸ் |
| 7 | ஆ) | கிளர்வு ஆற்றல் | 15 | ஈ) | PHBV |
| 8 | அ) | $BF_3$ | | | |

## பகுதி - ஆ

| | |
|---|---|
| 16 | சல்பைடு தாதுக்களை அடர்பிக்க நுரை மிதப்பு முறை ஏற்றது.எ.கா.கலினா(PbS),ஜிங்க்பிளாண்ட்(ZnS) |
| 17 | **சிலிக்கோன்களின் பயன்கள்:**<br>➢ சிலிக்கோன்கள் குறைந்த வெப்பநிலை உயவுப்பொருளாகவும், வெற்றிடப் பம்புகள், உயர் வெப்பநிலை எண்ணெய் தொட்டிகளிலும் பயன்படுகின்றன.<br>➢நீர் வெறுக்கும் ஆடைகள் தயாரித்தலில் பயன்படுகின்றன.<br>➢மின்மோட்டார்கள் மற்றும் மற்ற வீட்டு உபயோக பொருட்களில் மின்காப்பு பொருளாக பயன்படுகின்றன. |
| 18 | அக்வா ($H_2O$), அம்மைன்($NH_3$),டைஎத்திலீன்அமின் (en), ட்ரைஃபீனைல்பாஸ்ஃபீன் $P(Ph)_3$, |
| 19 | ➢ முகப்பு மையத்தில் காணப்படும் அணுவானது இரண்டு அலகுக்கூடுகளால் பகிர்ந்துக்கொள்ளப்படுகின்றன.<br>FCC அலகுக்கூட்டில் காணப்படும்அணுக்களின் எண்ணிக்கை $= (N_c/8) + (N_f/2)$<br>$= (8/8) + (6/2) = 1+ 3 = 4$ |
| 20 | சமன்படுத்தப்பட்ட சமநிலை சமன்பாட்டில் உள்ள வேதிவினைக்கூறு குணகங்களை அடுக்குகளாக கொண்ட பகுதிக்கூறு அயனிகளின் மோலார் செறிவுகளின் பெருக்குத்தொகை கரைதிறன் பெருக்கம் என வரையறுக்கப்படுகிறது. |
| 21 | கூழ்மத்துகள்கள் வழியே ஒளிக்கற்றையை செலுத்தினால் ஒளியின் தடம் புலப்படும்.<br>காரணம் : கூழ்மத்துகள்களின் ஒளி சிதறடிக்கும் பண்பு. இப்பண்பு டிண்டால் விளைவு எனப்படும். |
| 22 |  |
| 23 | ➢ ஹார்மோன்கள் என்பது ஒரு திசுவினால் சுரக்கப்பட்டு இரத்த ஓட்டத்தில் கலக்கப்படும் கரிமச் சேர்மமாகும். இது மற்ற செல்களில் உடலியல் துலங்களைத் தூண்டுகிறது.<br>➢ இது செல்களுக்கிடைப்பட்ட சமிக்ஞ்சை மூலக்கூறாகும். எ.கா : இன்சுலின், ஈஸ்ட்ரோஜன். |
| 24 | $t_{1/2} = 0.693 / k = 0.693 / 1.54 \times 10\text{-}3\ S^{-1} = 450$ Sec. |

## பகுதி - இ

| | |
|---|---|
| 25 | அலுநைட் படிகாரக் கல்லை நன்கு தூளாக்கி, நீர்த்த $H_2SO_4$ சேர்த்து கொதிக்க வைக்கப்படுகிறது. பிறகு தேவையான அளவு $K_2SO_4$ சேர்த்து படிகமாக்கப்படுகிறது<br>**$K_2SO_4 . Al_2(SO_4)_3 .4Al(OH)_3 + 6 H_2SO_4 \rightarrow K_2SO_4 + 3Al_2(SO_4)_3 + 12H_2O$**<br>**$K_2SO_4(aq) + Al_2(SO_4)_3(aq) + 24 H_2O \rightarrow K_2SO_4. Al_2(SO_4)_3.24H_2O(s)$ (Potash Alum)** |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| 26 | வ எண் | லாந்தனாய்டுகள் | ஆக்டினாய்டுகள் |
|---|---|---|---|
| | 1 | வேறுபடுத்தும் எலக்ட்ரான்கள் 4f ஆர்பிட்டாலில் சேர்கிறது. | வேறுபடுத்தும் எலக்ட்ரான்கள் 5f ஆர்பிட்டாலில் சேர்கிறது. |
| | 2 | 4f ஆர்பிட்டாலில் பிணைப்பு ஆற்றல் அதிகம் | 5f ஆர்பிட்டாலில் பிணைப்பு ஆற்றல் குறைவு |
| | 3 | இவைகளின் அணைவுச் சேர்மங்களை உருவாக்கும் தன்மை குறைவு. | இவைகளின் அணைவுச் சேர்மங்களை உருவாக்கும் தன்மை அதிகம் |
| | 4 | பெரும்பாலான லாந்தனாய்டுகள் நிறமற்றவை | பெரும்பாலான ஆக்டினாய்டுகள் நிறமுள்ளவை ($U^{3+}$ சிவப்பு, $U^{4+}$ பச்சை, $UO_2^{2+}$ மஞ்சள்) |
| | 5 | இவைகள் ஆக்சோ நேரயனிகளை உருவாக்குவதில்லை | இவைகள் ஆக்சோ நேரயனிகளை உருவாக்குகின்றன. $UO_2^{2+}$, $NpO_2^{2+}$ |
| | 6 | லாந்தனாய்டுகள் சில நேர்வுகளில் +3 ஆக்ஸிஜனேற்ற நிலையுடன் +2 மற்றும் +4 | ஆக்டினாய்டுகள் +3 ஆக்ஸிஜனேற்ற நிலையுடன் +4, +5, +6 மற்றும் +7 போன்ற உயர் |
| 27 | 1 | மைய உலோக அயனி | Pt |
| | 2 | உலோக அயனியின் ஆக்சிஜனேற்ற நிலை | +2 |
| | 3 | அணைவு எண் | 4 |
| 28 | | ➢ வினை விளை பொருள்களில் ஒன்று வினைவேக மாற்றியாக செயல்படுவது.<br>➢ எத்தில் அசிட்டேட்டை நீராற் பகுக்கும்போது உருவாகும் அசிட்டிக் அமிலம் தன் வினைவேக மாற்றியாக செயல்படுகிறது | |
| 29 | | **முதல் விதி** : மின்னாற்பகுத்தலின் போது மின்முனைகளில படியும் பொருளின் நிறையானது(m) மின்கலத்தின் வழியே பாயும் மின்னோட்டத்தின் அளவிற்கு(Q) நேர்விகிதத்திலிருக்கும். **m α Q**<br>**இரண்டாம் விதி** : ஒரே அளவு மின்னோட்டத்தை வெவ்வேறு மின்பகுளிக் கரைசல்களின் வழியேசெலுத்தும்போது மின்முனைகளில் விடுவிக்கப்படும் பொருளின் அளவானது அவற்றின் மின்வேதிச்சமானங்களுக்கு நேர்விகிதத்திலிருக்கும். **m α Z** | |
| 30 | | ➢ நீர்க்கரைசலில் ஒரு அமினோ அமிலத்தின் கார்பாக்சில் தொகுதியிலுள்ள புரோட்டானை அமினோ தொகுதிக்கு மாற்ற இயலும்.<br>➢ இதனால் இந்த இரண்டு தொகுதிகளும் எதிரெதிர் மின்சுமைகளை பெறுகின்றன. இந்த அயனிகள் சுவிட்டர் அயனிகள் எனப்படும்<br><br>Zwitter ion of alanine | |
| 31 | | மெத்தில் அசிட்டேட் + எத்தனால் $\xrightarrow{H+}$ எத்தில் அசிட்டேட் + மெத்தனால்<br>$CH_3COOCH_3 + C_2H_5OH \xrightarrow{H+} CH_3COOC_2H_5 + CH_3OH$ | |
| 32 | | **நைலான்– 2-நைலான் -6**<br>இது பாலிஅமைடு பிணைப்புகளைக் கொண்டுள்ள ஒரு பல்லின பலபடிஆகும்.கிளைசீன் மற்றும் E –அமினோ கேபராயிக் அமிலம் ஆகிய ஒற்றைப்படிகளை பலபடியாக்கலுக்கு உட்படுத்துவதன் மூலம் இந்த பலபடி பெறப்படுகிறது.<br> | |
| 33 | | A) $C_6H_6$(பென்சீன்) B) $C_6H_5CH_3$(டொலூவின்) C) $C_6H_5COOH$ (பென்சோயிக் அமிலம் ) | |





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

34. அ) மின்காந்த பிரிகை முறை:

- தாது மற்றும் மாசுக்களின் காந்தப் பண்புகளில் காணப்படும் வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டது.
- பெர்ரோ காந்தத் தன்மையுள்ள தாதுக்கள் அடர்பிக்கப்படுகிறது.
- உல்ப்ரமைட் மாசுவிலிருந்து வெள்ளீயக்கல் தாது பிரித்தெடுக்கப் படுகிறது.
- நன்கு தூள் செய்யப்பட்ட தாது மின்காந்தப் பிரிப்பான் மீது விழுமாறு செய்யப்படுகிறது.
- மின்காந்தப் பிரிப்பான் சக்கரங்களின் வழியே ஒரு நகரும் பட்டை இயங்குகிறது.
- தாதுவில் உள்ள காந்தத் தன்மையுள்ள தாதுக்கள் சக்கரங்களுக்கு அருகில் விழுகிறது. காந்தத் தன்மையற்ற தாதுக்கள் மற்றும் மாசுக்கள் சக்கரங்களுக்கு அப்பால் விழுகிறது




34. ஆ) **i)** ஒரு தனிமத்தின் அணுச்சங்கிலி உருவாக்கும் திறன் சங்கிலித் தொடர் ஆக்கம் எனப்படும். கார்பன் ஆனது C, H, N, S அணுக்களுடன் சேர்ந்து சங்கிலி பிணைப்பை உருவாக்கும்.

## நிபந்தனைகள்

- தனிமத்தின் இணைதிறன் இரண்டு அல்லது அதற்குமேல் இருக்கவேண்டும்.
- அதே தனிமத்துடன் சுய பிணைப்பை ஏற்படுத்த வேண்டும்.
- சுய பிணைப்பு வலிமையானதாக இருக்கவேண்டும்.
- மற்ற மூலக்கூறுகளுடன் வினைபுரிவதில் மந்தத் தன்மையாக இருக்கவேண்டும்.

**ii)** ஹீலியத்தின் பயன்கள்

- மிதக்கும் பலூன்களில் நிரப்ப பயன்படுகிறது
- ஆகாய விமானங்களின் டயர்களை நிரப்ப பயன்படுகிறது
- He - $O_2$ கலவை நீரில் மூழ்குபவர்கள் சுவாசிக்க பயன்படுகிறது
- He - $O_2$ கலவை ஆஸ்துமாவை குணப்படுத்த பயன்படுகிறது.
- கிரையோஜெனிக் தொழில் நுட்பவியலில் பயன்படுகிறது.

35. அ) **i)** பாஸ்பரஸின் புறவேற்றுமை வடிவங்கள்

1.வெண் பாஸ்பரஸ் 2.சிவப்பு பாஸ்பரஸ் 3.ஊதா பாஸ்பரஸ் 4.ஸ்கார்லெட் பாஸ்பரஸ்

| வ.எண் | வெண் பாஸ்பரஸ் | சிவப்பு பாஸ்பரஸ் |
|---|---|---|
| 1 | விஷத்தன்மை உடையது | விஷத்தன்மை அற்றது |
| 2 | பூண்டின் மணமுடையது | மணமற்றது |
| 3 | இருளில் ஒளிரும் | இருளில் ஒளிராது |
| 4 | அறை வெப்பநிலையில் தானாக தீப்பற்றி கொள்ளும். | அறை வெப்பநிலையில் தானாக தீப்பற்றி கொள்ளாது. |
| 5 | எரியூட்டும் வெப்பநிலை குறைவு | எரியூட்டும் வெப்பநிலை அதிகம் |

**II)** ஹேலஜனிடைச் சேர்மங்கள் ஒவ்வொருஹேலஜனும் மற்றஹேலஜன்களுடன் வினைப்பட்டுஹேலஜன் இடைச் சேர்மங்களைஉருவாக்குகின்றன. எ.கா : ClF , $ClF_3$, $ClF_4$, $IF_4$

**35.**ஆ)

| அணைவுச் சேர்மம் | $[Ni(CN)_4]^{2-}$ |
|---|---|
| 28Ni -ன் எலக்ட்ரான் அமைப்பு | $3d^8\ 4s^2$ |
| $Ni^{2+}$-ன் எலக்ட்ரான் அமைப்பு |   |
| $CN^-$ ஈனி பலமுள்ளது. எனவே எலக்ட்ரான்களை இணைக்கிறது. |  |
| இனக்கலப்பு | $dsp^2$ |
| அணைவு எண் | 4 |
| வடிவம் | தளசதுரம் |
| தனித்த எலக்ட்ரான்கள் இல்லை | டையா காந்தத்தன்மை |
| காந்த திருப்பு திறன் | $\mu_s = \sqrt{n(n+2)} = 0$ BM |

**36.**அ)

**ஷாட்கி குறைபாடு**

- படிகத்தில் சம எண்ணிக்கையில் நேர் மற்றும் எதிர்மின் அயனிகள் இல்லாமல் இருப்பது.
- எ.கா : NaCl
- நேர் மற்றும் எதிர்மின் அயனிகளின் உருவளவு ஒரே மாதிரியாக இருக்கும்.
- படிகத்தின் அடர்த்தியை குறைக்கும்.
- படிகத்தின் வேதிவினைக் கூறு விகிதத்தில் எந்த மாற்றமும் இருக்காது.




**ப்ரெங்கல் குறைபாடு**

- படிக அணிக்கோவை தளத்தில் இடம்பெற வேண்டிய ஒரு அயனியானது அவ்விடத்தில் அமையாமல் மற்றொரு இடைச்செருகல் நிலையில் நிரப்பபடுவதால் ஏற்படுகிறது.
- எ.கா : AgBr
- நேர் மற்றும் எதிர்மின் அயனிகளின் உருவளவில் அதிக வேறுபாடு இருக்கும்.
- படிகத்தின் அடர்த்தியை பாதிக்காது.



ஆ)

A ⟶ விளைபொருள்

வினைவேகம் = K[ A] o (K - வினைவேக மாறிலி)

$$\frac{-d[A]}{dt} = k\ (1) \qquad (\because [A]^0 = 1)$$

$$-d[A] = k\ dt$$

t = 0 -ல் [A] = [A₀] t = t -ல் [A] = [A]

$$-\int_{[A_0]}^{[A]} d[A] = k\int_0^t dt$$

$$-([A])_{[A_0]}^{[A]} = k\,(t)_0^t$$

$$[A_0] - [A] = kt$$

$$K = \frac{[A_0] - [A]}{t}$$

**II)** கரைப்பான் விரும்பும் கூழ்மங்கள்

பிரிகை நிலைமை மற்றும் பிரிகை ஊடகம் இடையே வலுவான கவர்ச்சி விசை உண்டு. நிலைப்புத் தன்மை அதிகம். எளிதில் வீழ்படிவாகாது.

எ. கா. புரதம் மற்றும் ஸ்டார்ச் ஆகியவற்றின் கூழ்மக்கரைசல்.

37.அ)

**ஆஸ்வால்டின் நீர்த்தல் விதிக்கான சமன்பாட்டை தருவி**

$CH_3COOH \rightleftharpoons CH_3COO^- + H^+$

| | $CH_3COOH$ | $H^+$ | $CH_3COO^-$ |
|---|---|---|---|
| ஆரம்ப மோல்கள் | 1 | - | - |
| $CH_3COOH$ ன் பிரிகை வீதம் | α | - | - |
| சமநிலையில் மோல்கள் | 1-α | α | α |
| சமநிலையில் செறிவு | (1-α)C | αC | αC |

அசிட்டிக் அமிலத்தின் பிரிகை மாறிலி

$$k_a = \frac{[H^+][CH_3COO^-]}{[CH_3COOH]}$$

$$\alpha = \frac{\text{பிரிகையடைந்த மோல்களின் எண்ணிக்கை}}{\text{மொத்த மோல்களின் எண்ணிக்கை}}$$

$$k_a = \frac{(\alpha C)(\alpha C)}{(1-\alpha)C} = \frac{\alpha^2 C}{1-\alpha}$$

வலிமை குறைந்த அமிலமானது மிகக் குறைந்த அளவே பிரிகையடைகிறது. ஒன்றுடன் ஒப்பிடும்போது α மதிப்பு மிகச்சிறியது. (1>α)

**$K_a = \alpha^2 C$** (α = பிரிகை வீதம், $K_a$ = பிரிகை மாறிலி, C = செறிவு)

$$\alpha^2 = \frac{K_a}{C}$$

$$\boxed{\alpha = \sqrt{\frac{K_a}{C}}}$$

ஆ) I)

**கேப்ரியல் தாலிமைடு தொகுப்பு முறை**

தாலிமைடு $\xrightarrow{KOH}$ பொட்டாசியம் தாலிமைடு $\xrightarrow{RX}$ N-ஆல்கைல் தாலிமைடு $\xrightarrow{KOH}$ ஓரிணைய அமீன்




II) உணவு பதனப்பொருட்கள் :

- நுண்ணுயிரிகளின் வளர்ச்சி காரணமாக நொதித்தல், அமிலமாக்கல் அல்லது மற்ற உணவு கெடும் செயல்முறைகளை தடுக்கவோ, ஒடுக்கவோ செய்யும் திறனை பதனப்பொருட்கள் பெற்றுள்ளன.
- எ.கா : பென்சோயிக் அமிலம், அசிட்டிக் அமிலம், சோடியம் மெட்டா பை சல்பேட்.

38.அ)I)

**ரோசன்மண்ட் ஒடுக்க வினை**

அசிட்டைல் குளோரைடு + $H_2$ $\xrightarrow{Pd / BaSO_4}$ அசிட்டால்டிஹைடு

$$CH_3-\overset{O}{\overset{||}{C}}-Cl + H_2 \xrightarrow{Pd/BaSO_4} CH_3-\overset{O}{\overset{||}{C}}-H + HCl$$

Pd - வினைவேக மாற்றி     $BaSO_4$ - வினைவேக நச்சு

II)

**பாப'.ப் விதி**

பாப'.ப் விதிப்படி சீர்மையற்ற கீட்டோன்களை ஆக்சிஜனேற்றம் செய்யும்போது, சிறிய ஆல்கைல் தொகுதியுடன் கீட்டோ தொகுதி இணைந்திருக்கும் வகையில் (C-CO) பிணைப்பு பிளவுறுகிறது.

$$CH_3-CH_2-CH_2-\underset{O}{\underset{||}{C}}-CH_3 \xrightarrow[\text{அடர் } HNO_3]{(O)} CH_3CH_2-COOH + CH_3COOH$$

ஆ) பீனால் (A)- $C_6H_5OH$

அனிலீன் (B)- $C_6H_5NH_2$

பென்சீன் (A)- $C_6H_6$

www.Padasalai.Net